உ

சிவமயம்.

சைவசமயாசாரிகளாகிய

# நால்வரானந்தக்களிப்பு.

இஃது

இயாவருக்கும்

உபயோகமாகும்பொருட்டுக்

கனம்பொருந்திய திருநெறித்தமிழ்வேத

சபையார்கேட்டுக்கொண்டபடி

ஷை சபையைச் சார்ந்தவர்களாகிய

ம-ா-ா-கா-ப-மு-க-த-பு-கா-

**சபாபதி முதலியாரா**

லியற்றப்பட்டுச்

சதுரங்கபட்டணம்

**அண்ணாமலைமுதலியா**

ராலதமது

சரஸ்வதீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஷை சபையின் இராயசம்

திருவே - வீராசாமிமுதலியார்

அ-செங்கல்வராயமுதலியார் இவர்களால்

நிறைவேறியது.

சாலிவாகன சகாப்தம்- ௲௭௱௭௰௨.

சாதாரண வரு-புரட்டாசிமீ.

உ

## மதுரைத்திருஞானசம்பந்தசுவாமிகள்
## ஆதீனவித்வான்
## திருச்சிற்றம்பலத்தம்பிரானவர்கள்பாடிய
## கவிகள்.

---

### வெண்பா.

கச்சிச்சபாபதியாங்கல்விக்கடற்கண்ணே ...*
யிச்சித்தினிப்பவெழுந்ததே-மெச்சி.. .... *
நளிப்பார்புகழ்சைவநால்வரானந்தக் .. ...*
களிப்பாஞ்சுவையமுதங்காண்.. ..... .. ..*


சைவசமையத்தலைவரொருநால்வர்கண்மேற் *
சைவநிறைகச்சிச்சபாபதியாந்-தெய்வநெறிய
பேரானந்தக்களிப்புப் பெற்றோன் மகிழ்ந்து
ஓரானந்தக்களிப்புத்தேர்ந்து. [ரைத்தான்.

இஃது

வீரணந்தோட்டம்,

கோவிந்தநாயகரால் அச்சடிக்கிப்

பதிப்பிக்கப் பட்டது.



திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தசுவாமிகள்

## ஆனந்தக்களிப்பு.

சிவசிவசங்கரசம்பு-என்னும் *
திருஞானசம்பந்தசுவாமியை நம்பு-சிவ. *

கவலையெல்லாமின்றுதீரும்-நெஞ்சே *
கலங்காதேவாழ்வெல்லாநம்மையேசேரும்-சி.

சீகாழிப்பதியிலிருக்கும்-நிலத் *
தேவரிற்பிறவிப்பிணியைப்பெருக்கும் *
மோகாடவியைக்கருக்கும்-ஞான *
மூர்த்திய கவுணியருள்ளமுருக்கும்-சிவ. (௧)

(உ) திருஞானசம்பந்தசுவாமிகள்.

சிவபாதவிருதயரொன்னும்-ஐயர் - -
தேவிபகவதியாரிவருன்னுந் - -
தவமேயுருவாகித் தூன்னும்-இந்தச் -
சகத்தினில்வந்தன்பர்தம்முள்ளேமன்னும் (உ

அன்னைதந்தையினேடெல்லாரும்-வாழ்த்த
அருமையாகிபபிள்ளையாரொனும்பேரும் -
மன்னியெத்தேசத்தினேரும்-சைவ -
மார்க்கத்தினுண்மையறிந்திடத்தேரும்-சி. (ர

ஆண்டொருமூன்றதுசேரத்-தீர்த்தத் -
தத்தனுடனேசென்றன்பதுநேர -
மூண்டழுதே துயர்தீரத்-தோனி -
முதல்வனூர்விடையேறியுமையோடுசாரச்-சி

பாவியிறைஞ்சிடக்கண்டு-சிவன் -
பார்வதிக்குச்சொல்லவேயருள்கொண்டு
திருஞானப்பாலினையுண்டு-கேட்குந் -
தந்தைக்கிவர்கள்தந்தாரெனப்பண்டு-சிவ. ((

கையையுயரவெடுத்துச்-சுட்டிக் - [
காட்டித்தோடுடையவென்றேதமிழ்தொடுத்
தையவுரைத்தன்படுத்துப்-போற்றிப் -
பார்தனிலேகலிவாராமல்தடுத்துச்-சிவ. (

சேர்ஞானசம்பந்தரொன்றும்-யாருஞ் *
செப்பும்ஆளுடையபிள்ளையாரொன்றும் *
பேர்பெற்றுலகெலாமின்றும்-போற்றப் *
பிறையணிசடையுடையெம்மானேதுன்றும்.

கோலக்காவிற்கையாற்றாளம்-போட்டுக் *
கொண்டுபதிகங்கள்பாடத்தயாளம் *
சாலப்பரமன்பொற்றாளந்-தாச் *
சத்திபின்போசைகொடுக்கக்கண்டாள-சிவ- (அ)

தந்தையார்தந்தோளிற்றாங்கிக்- கொண்டு *
சாரத்தலங்களிற்சென்றன்பிலோங்கி *
மூந்து துயரங்கள்நீங்கி-விட *
முதல்வனைப்பாடியருள்தரவாங்கிச்-சிவ (௯)

திருவரத் துறையினின்முத் துக்-குடை *
திகழ்முத் துச்சிவிகைமுத் துச்சின்னமுத்து *
பெருகுமெக்காளமுமுத் து-புனை *
பெரியதாரையுமத்தரருளக்களித் துச்-சிவ (௰)

ஏச்சொன் றுமில்லாதசோள-ராசன் *
ஈன்றமகளுக்குநோயொன்றுமுள *
பாச்சிலாச்சிராமத் துக்காள-கண்டப் *
பரமனைப்பாடித் துதித்தந்நோய்மாளச்-சி(௰க

பட்டீச்சரத்தினி லுற்ற-சிவன் *
பரிவுடன்முத் துப்பந்தர்தரப்பெற்ற *
தட்டாதவன்பினின்மற்றச்-சிவ - *
தலமெங்கும்போய்த் துதி செய்தருள்முற்றச்.

ஆவடு துறையினிற்சென் று-எந்தை - *
அருமகன்செய்யப்பொருள்தாருமென் று *
ஓவில்பதிகம்புகன் று-தொழு - *
துலவாக்கிழியரனார்தரநின் று-சிவ (௰௩)

(௫) திருஞானசம்பந்தசுவாமிகள்.

அந்தப்பொன்முடிச்சிவனையின்ற-தந்தைக் *
களித்தும்மொழிங்காழிவாழ்பவரான்ற - *
சிந்தைக்குளேமகிழ்தோன்ற-யாகஞ் - *
செய்யலாமென்றன்புதம்முளேயூன்றச்-சி(யசு

பாம்பொருசெட்டியைக்கடித்து-விஷம் *
பாவியிறக்கவுரும்பெண்துடித்துத் - *
தேம்பிடப்பரன்புகழ்வடித்துப்-பாடிச் *
செத்தவன்பிழைத்திடவன்புதடித்துச்-சி(யரு

அவ்விருவருக்கும்பரிந்து-மணம் - *
அந்தமருகலிற்சாட்சியுந்தெரிந்து - *
செவ்வையுடனேபுரிந்து-தேவ - *
தேவனைப்போற்றியன்புள்ளேவிரிந்து-சி(யசா

திருவீழிமிழலையில்விருப்பு-மேவிச் - *
சிவனைப்பணிந்தங்கிருக்கக்கருப்பு - *
மருவவக்கோயிலிருப்பு-கொள்ளும் - *
மகதேவன்பொற்காசுதரவெள்ளிப்பொருப்பு.

பொற்காசுக்குப்பண்டங்கொண்டே-அமுது *
போற்றிப்படைக்கவடியார்திரண்டே - *
அற்பாகவந்தமர்ந்துண்டே-களித் - *
தானந்தமெய்தியிருப்பதுகண்டே-சிவ (யஅ)

அந்தக்காசுவட்டமின்றி-மாற - *
அருமையுடனேபதிகமுன்னன்றி - *
முந்துறப்பாடியேவென்றி-கொண்ட - *
மூவிலைச்சூலத்தர்பாலன்புதுன்றிச்-சிவ (யகூ)

திருமறைக்காட்டினிற்சேர்ந்து-அப்பர் - *
திறப்பித்தகதவினைச்சாத்திடநேர்ந்து - *
மருவியபதிகமுன்றேர்ந்து-பாடி - *
வாழ்த்திப்பணிந்தெழுந்தேயன்புகூர்ந்து(௨௰

மதுரையிலேசமண்மூடி-யிருத்தல் - *
மங்கையர்க்கரசியார்தெரிவிக்கநாடி - *
இதமாகச்சென்றங்குக்கூடிச்-சமணர் - *
இட்டதீபாண்டியற்காகவேபாடிச்-சிவ (௨௧)

பாண்டியன்மேனிகொதிக்கச்-சுரம் - *
பற்றுதல்நீங்கிடப்பாடிக்களிக்க - *
ஈண்டுமமணையழிக்க-நள்ளாற் - *
றீசன்பதிகமழலிலேவைக்கச்-சிவசிவ. (௨௨)

ஆற்றினிலேடுவிடுத்துக்-கழுவில் - *
அமணர்களேறிடவுள்ளங்கடுத்து - *
நீற்றினையாருமெடுத்துப்-போற்றி - *
நெற்றியிற்பூசிக்கொளவென்படித்துச்-சி (௨௩)

துதிசெய்தவிடத்திருந்து-சோம - *
சுந்தரன்பாதமன்போடுபணிந்து - *
பதிகங்கள்பாடித்திருந்து-மெங்கள் - *
பாண்டிமாதேவிதனையேபுகழ்ந்து-சிவ (௨௪)

திருக்கொள்ளப்பூதூரினாற்றி-லோடம் - *
செல்லப்பதிகமுள்ளன்புடன்சாற்றி - *
இருக்குமடியாரையேற்றிக்-கரை - *
எய்திப்பரன்சன்னிதிதன்னிற்போற்றி. சி(௨௫)

(சா) திருஞானசம்பந்தசுவாமிகள்.

தெளிச்சேரிக்கெய்திடும்போது-புத்தன் *
சினந்துதடுக்கவவன்றலைமீது - *
சுளிச்சிடிதானுந்தப்பாது-விழத் - *
தொழுதன்பொடுதுதிசெய்தல்விடாது (உசா)
ஆண்பனைபெண்பனையாகக்-குரும்பை - *
யாண்பனையென்னும்பதிகமவன்மோக - *
மாண்பறவோதியேசோகம்-விட - *
வாய்ப்புளவன்பர்க்கருள்சிவலோக-சிவ (உஎ)
திருமயிலையினில்வெந்திட்ட-அங்கந் - *
திரண்டுயிர்ப்பூம்பாவையாகவேயிட்ட - *
மருவிப்பதிகமட்டிட்ட-என்ன - *
வாய்மையாலோதியருள்வந்துகிட்டச்-சி(உஅ)
இவ்வண்ணந்தலமெங்கும்விரவிப்-பணிந் *
திசைப்பதிகங்களிசைத்தன்புமருவிச் - *
செவ்வைகொள்மணத்துளமிருவிப்-பின்னும்-
சிவனேபொருளெனவெண்ணித்துன்பொருவி
நல்லூர்ப்பெருமணமென்னச்-சொல்லும் *
நற்பதிதன்னிலேபாவருந்துன்னக் - *
கல்லூர்ப்பெருமணமென்ன-ஓதுங் - *
கடவுட்பதிகமுனாசெய்துமன்னச்.சிவ (ருய)
சிவனடியாரெல்லாம்வாழப்-போற்றும் - *
திருநெறித்தமிழ்வேதமெந்நாளும்வாழப் *
புவனியுள்ளோரெல்லாம்வாழத்-தொழும் *
பூதிசாதனமெங்கும்போற்றியேவாழச்-சிவசிவ

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# அப்பர்சுவாமிகள்

## ஆனந்தக்களிப்பு.

அரகரசிவசிவசம்பு-என்னும் - - *
அப்பர்சுவாமியை அகமேநீநம்பு-அரகர - *
வருமேபெரிதானவாழ்வு-வீணில் - *
மயங்காதேநமக்கினியில்லையொருதாழ்வு- அரக.

---

திருமிதுமாமூரிலிருந்து-நாளும் - *
செழிக்கும்வேளாளர்குலந்தன்னிலுவந்து *
வருபுகழனாருளமகிழ்ந்து-களிக்க - *
மாதினியார்வயிற்றருமையாய்வந்து-அர (க)

மருணீக்கியாரெனும்பேரும்-கொண்டு - *
வளர்ந்துதங்குலத்தினிலுள்ளோர்கள்யாரும் *
அருமைபெருமையொடுசீரும்-செய்ய - *
அன்புமிகுத்திடவிருந்தாரோயாரும்-அர (உ)

தந்தைதாயார்சிவலோகம்-அடையத் - *
தமக்கைதிலதவதிதாய்போலாகச் - *
சிந்தைமகிழ்ந்ததியோக-மொடு - *
சீராகவாழ்ந்தறஞ்செய்துசிவோக-அரகர (ங)

திருவீழிமிழலையில்ஞான-முண்ட - *
செல்வருடனேயடைந்தரிதான - *
பொருவில்பதிகநிதான-மொடு - *
போற்றிப்பணிந்திருந்தேதினமானம்-அ (௰௬)

கருப்புக்காலம்வந்துநேர-ஐயர் - *
காசுதரப்பெற்றடியார்கள்சேர - *
விருப்பினமுதிட்டுவார-மன - *
மேவியிருந்துகருப்பதுதீர-அரகர (௰௭)

திருமறைக்காட்டிற்சிறக்கப்-பூசை - *
செய்துவேதஞ்சாத்துங்கதவைத்திறக்கப் - *
பொருவில்பதிகந்துறக்க-வாணர் - *
போற்றும்படிக்குப்புகன்றுதிறக்க-அ (௰௮)

ஆவடுதுறையிற்சம்பந்தர்-கேட்க - *
ஆயிரம்பொன்னுலவாக்கிழிதந்த - *
ஆவலைச்சிறப்பித்துச்சந்த-முடன் - *
அரியபதிகம்புகன்றெனைப்புரந்த-அர (௰௯)

திருப்பைஞ்ஞீலிக்கன்பாய்ப்போக-வழியிற் *
சிவனார்பொதிசோறுதந்துபின்தாக - *
விருப்பையுநீக்கியங்கேகக்-கூட - *
விரவிவந்துமறைந்திடச்சிவலோக-அர (௨௰)

கோயின்மயேந்திரப்பள்ளி-புன்கூர் - *
குருகாவூர்பெருமணந்திருக்காட்டுப்பள்ளி *
தூயகாழிசிராப்பள்ளி-நல்லூர் - *
துறையூர்பட்டீச்சரந்தொழுதுள்ளேயுள்ளி-அ

பனையூர் தலையாலங்காடு- துறையூர் - *
பயற்றூர்செங்காட்டங்குடிகொள்ளிக்காடு *
நினையுந்திருக்குரங்காடு துறை - *
நின்றியூர்பருதிநியமத்துநீடு-அரகர (௨௨)

கடவூர்மயானநள்ளாறு-நாகைக் - *
காரோணந்திருத்தெளிச்சேரிகோட்டாறு *
கடைமுடிவாய்மூரையாறு-விளமர் - *
காறாயில்முதலாந்தலத்திடைவீறு-அர (௨௩)

காஞ்சிபுரமாலங்காடு-ஒத்தூர் - *
கழுக்குன்றங்காளத்திவல்லம்வேற்காடு - *
ஆஞ்சீரிலம்பையங்கோடு-மயிலை - *
ஆதிபுரியிலுஞ்சென்றன்பினீடு-அரகர (௨௪)

கயிலைக்குச்செல்லநினைந்து-விரைவில் - *
காலையுமாலையுமோயாமல்நடந்து - *
பயிலுஞ்சுரத்திலடைந்து-தழல் - *
பரந்துசுடவேயுடலங்கரிந்து-அரகர (௨௫)

காலின்மணிக்கட்டுத்தேயப்-பின்பு - *
கையாற்றவழ்ந்துசென்றதுவுந்தேய்ந்தோய-
பாலையில்மார்பாலுபாய-மோடு - *
பரிந்துபுரண்டுடலெல்லாமுசாய-அர (௨௬)

அவ்வண்ணம்வருவதைநோக்கி-கைலை - *
அரனாரவர்துன்பமெல்லாமுநீக்கிச் - *
செவ்விதரவருள்தேக்கி-ஒரு - - *
தெய்வமுனியாகிவரத்துயர்போக்கி-அர (௨௭)

நேர்தடமங்கொன்றமைத்தே-மிகு - *
நேயத்தினிதின்றெழுந்கிளையயாறறித்தே - *
சேர்கயிலைதரிசித்தே-நமைச் - *
சிந்தியென்றபடிகண்டு துதித்தே-அரகர (௨௮)

திருவாலவாய்பரங்குன்று-தொழுது - *
திருப்பூவணஞ்சுழியல்கொடுங்குன்று - *
திருவேடகத்திலுஞ்சென்று-பணிந்து - *
திருநெல்வேலிக்குப்போய்த் துதிகள்நவின்று.

திருப்புகலூரிலேமன்னி-நாளுஞ் - *
சிவனைத்தொழுதுகைத்தொண்டொடுதுன்னி *
இருப்பப்பாஞ்தேவகன்னி-மாலா - *
எவ்வெறுத்துப்பதிகங்கள்பன்னி-அரகர (௩௰)

எண்ணுகேனென்சொல்லியெண்ணு-கேனே *
எம்பெருமானெனப்போற்றியேவிண்ணு - *
மண்ணுந்தொழும்லிங்கநண்ணும்-பெரு - *
வாழ்வுபெற்றடியார்துயர்கெடப்பண்ணும்-அ

திருநெறித்தமிழென்றும்வாழ-எங்கள் - *
சிவனடியார்திருக்கூட்டமும்வாழ - *
மருவுமுயிரெல்லாம்வாழ-ஆளும் - *
மன்னவர்செங்கோல்முறையென்றும்வாழ(௩௨

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்திசுவாமிகள்

## ஆனந்தக்களிப்பு.

அரகரசிவசிவசம்பு-என்னும் *
ஐயர்சுந்தரமூர்த்தியார்பதநம்பு-அரகர. *
இருவினையெல்லாமுந்தீரும்-நெஞ்சே *
எண்ணியபொருளெல்லாம் நம்மையேசேரும்.

---

கயிலையிலரனார்க்குச்சூட்ட-மலர் - *
காவினிற்கொய்யப்போயருளங்கேகூட்டப் *
பயிலுந்தொழியர்மேலேநாட்ட-மெய்தப் *
பரனறிந்துலகிற்போவென்றசொல்வாட்ட(௧)

மானிடமாகியதித்தே-புவியில் *
மயங்காமலாட்கொள்ளவேண்டுமென்றடுத்தே
கானுளவேங்கைத்தோலுடுத்தே-நிற்கும் *
கண்ணுதலார்பதம்போற்றித்துதித்தே-ஆ(௨)

திருநாவலூரென்னுந்தலத்தில்-வாழும் *
சிவவேதியராமறையோர்குலத்தில் த
இருமைகொள்சடையனார்நலத்தில்-எங்கள் *
இசைஞானிவயிற்றினில்வந்திந்நிலத்தில்- (௩)

நம்பியாரூரராம்பேரும்-மன்னர் *
நரசிங்கமுனையராலருமையாஞ்சீரும் *
சம்பிரமமாகவேசேரும்-படி *
சார்ந்துவளர்ந்துகருணையேயாரும்-அர. (ச)

திருமணம்நடந்திடுங்காலை-நந்தம் *
சிவனார்மறையவராகியாளோலை *
பிரியமுடன்காட்டமேலைச்-சார்பால் *
பித்தனேயென்றணிகொன்றைப்பூமாலை. (ரு)

காட்டுமாளோலையைப்பிடுங்கிக்-கிழித்துக் *
கண்ணுதலெந்தைமுறையிட நடுங்கிக் *
கூட்டத்தார்முன்னமடங்கித்-தீர்ப்பு *
கொடுத்திடவெண்ணெய்நல்லூரினுளொடுங்கி.

அந்தணர்நந்தமிருப்பின்-இடம் *
அறியக்காட்டுமையொன்னவிருப்பின் *
முந்திச்செலச்சென்றுநெருப்பின்-நிற (பின்.
முதல்வர்கோயிலில்மறைய வெள்ளிப்பொருப்

மறைந்தவர்விடையின்மேற்காணத்-தொழுது
வாழ்த்தநமைப்பாடுவாயெனமாண *
இறையவனேயண்டவாண-நாயேன் *
என்னென்றுபாடுவேனெனவன்பூண.அ.(அ)

பித்தாவென்றெம்மைநீயன்று-சொன்ன *
பேச்சின்படியின்றுபாடெனநின்று *
பித்தாபிறைசூடியென்று-பாடப் *
பெருமானிவ்வாறெங்கும்பாடெனத்தூன்றும்.

திருநாவலூர்முதலான-பதியில் *
சென்றுபதிகங்கள்பாடியேஞான *
பருவிடத்துறையூரிலான-மின்றி *
மகதேவனைப்பாடிக்கைலைவிமான-அர. (௰)

திருவதிகைக்குட்போகாது-புறத்தில் *
சித்தவடமடத்திற்றுயில்போது *
பரனவர்க்குத்தெரியாது-முடிமேல் *
பாதநீட்டிடப்படுக்கவிதித்து-அரகர. (௰௧)

ஐயர்நீர்யாரென்ன நம்மை-இன்னும் *
அறிந்திலையோவென்றுமறைந்திடச்செம்மை *
மெய்யனேயடியேனையிம்மை-தன்னில் *
விருப்புடனுண்டாயேயிதுமிகநன்மைஅ-௰௨

வழியிலுள்ளதலமெல்லாம் ஏத்தி *
எழுக்கொண்டுசிதம்பரந்தன்னிற்போய்ப்பொ
பழிநீக்குமீசன்முனில்லாப்-பாடிப் [ல்லாப்
பணியஆரூருக்குவாவென்றசொல்லால்-அ ௰௩

அருத்தியிற்றியாகனாட்பணிந்து-நன்றங் *
கமரும்பரவையைக்கண்டுமணந்து *
திருத்தொண்டர்பெருமைபுணர்ந்து-மகிழ்வால்
திருத்தொண்டத்தொகைபாடி யின்பம்புணர்
ந்து. அரகர ௰௪

குண்டையூரிற்பெற்றநெல்லை-யெங்கள் *
கோளிலிப்பெருமானேயாரூரிலெனல்லை *
கொண்டுபோய்ச்சேர்ப்பவரில்லை-ஆளைக் *
கொண்டங்கேசேர்ப்பிக்கநீதானேவல்லை-அர-

புகலூரிற்செங்கல்லைத்தங்க-மாக்கிப் *
புரிசடையோன்தரப்பாடியேபொங்க *
மிகவேயடியவர்சங்க-மேத்த *
விழைவுடன்பரவைக்குக் கொடுத்துமைபங்க.

விருத்தாசலத்திறைதந்த-பொருளை *
விருப்புடனாற்றிலிட்டாரூரினிறைந்த *
மருத்தாழ்குளத்திினிலந்தப்-பொருள் *
வரும்படிகண்டடியாரைப்புரந்த-அர- ௧௭

ஒற்றியூரிறையவர்பாத-மலர் *
ஒருமைபாற்றொழுதுசங்கிலிதன்னைநீத *
முற்றிடமணந்தழியாத-மகிழ் *
உள்ளத்திற்கொண்டுபரசிவநாத-அர ௧௮

திருவாரூர்க்குச்செல்லஎண்ணங்-கொண்டு *
திருஒற்றியூரெல்லைதாண்டலும்வண்ண *
மருவுபார்வைமறைப்புண்ணக்-காஞ்சி *
மகதேவனருளாலோர்பார்வைமுன்னண்ண- அ

அவிடம்விட்டாரூரிற்கூடிப்-பரன் *
அருளான்மற்றோர்கண்ணுந்தெரிதரநாடிக் *
கவின்கொள்பரவையாரூடி-யிருத்தல் *
கண்டுகொண்டுவீதிவிடங்கனைப்பாடி-அர-உ௰

பரவைதன்னூடலைநீக்க-ஆரூர்ப் *
பரமனைவாழ்த்திநற்றூதாகப்போக்கக் *
கரவின்றிப்பொய்ப்பேசிப்பார்க்க-அவர் *
கண்ணுதலோனெனஅறியாமனீக்க-அரக- உக

பின்னும்பரமனைத்தூண்ட-அந்தப் *
பிஞ்ஞகனிசவடிவாய்ச்சென்றுவேண்ட *
அன்னியமில்லாமல்தாண்ட-வேசன் [ட.
அடைந்தானென்றவள்தோழவருள்மிகப் பூண்

இப்படியாகநடந்த-செய்தி *
ஏயர்கோன்கலிக்காமனறியவுளெழுந்த *
வெப்பதுதீரவேவநந்த-மையர் *
விரவித்தணித்திடமகிழ்ந்தருடந்த-அர- உரு

சேரமான்வரநட்புத்தொடுத்துப்-பொன்னித்
திரைவெள்ளமோடாமனிற்கத்தடுத்து *
வாரமர்பையயாறடுத்துத்-தொழுது *
வந்தபின்வெள்ளப்பெருகவன்படுத்து-அ- உச

சேரமான்கொடுத்தனங்கள்-வழியில் *
திருமுருகன்பூண்டிப்பூதகணங்கள் *
சோரராய்ப்பறித்தகள்ளங்கள்-கண்டு *
சொற்பதிகம்பாடியுடனேபெற்றெங்கள்- உரு

புக்கொளியூரவிநாசி-தன்னிற் *
போய்முதலையுண்டசேய்வரப்பேசி *
அக்கணிமேனிச்சிவாசி-வாவென் *
றனுதினம்போற்றிப்பிறப்பினைரோசி-அ(உகா)

சார் அஞ்சைக்களத்தில்வெள்யானை-வரத் *
தானென்னமுன்படைத்தானென்றம்மானை *
பேரன்பாற்போற்றியிவ்வூனை-வேருய்ப் *
பிரித்தாயெனப்போற்றி செய்தண்டர்கோனை.

ஆனந்தக்களிப்பு.

சேரனார் குதிரையிற்போத-அன்பால் *
சிவனார் கயிலையிற்சேர்ந்துமைநாத *
பேரொலிசெய்கின்றவேத-மெனும் *
பெருகொளிவிளங்குஞ்சிலம்பணிநாத-அ(உஅ

உலகெலாமெந்நாளும்வாழ-ஞான *
உணர்வுடைச்சிவனடியாரெல்லாம்வாழ *
நிலவுவெண்ணீறென்றும்வாழச்-சைவ *
நெறிதான்தழைத்தோங்கியேவாழவாழ. (உகூ)

திருஞானசம்பந்தர்வாழ-ஆரூர்த் *
திருநாவுக்கரசுசுவாமிகள்வாழ *
திருவாதவூரரும்வாழ்ஞானத் *
திருவுளயாவரும்எந்நாளும்வாழ-அர- (௩௰)

உ

திருச்சிற்றம்பலம்.

# மாணிக்கவாசகசுவாமிகள்

## ஆனந்தக்களிப்பு.

சிவசிவசங்கரசம்பு-என்றும் *
திருவாதவூரனைமனமேநீநம்பு-சிவசிவ. *
அவலமாம்வாழ்விதைத்தள்ளு-பர *
மானந்தத்தேனிதோபெருகுதுட்கொள்ளு-சி.

பாண்டியிற்சிறந்திடும்வாத-வூரில் *
பரியுமாமாத்திரகுலத்தினிற்பாத *
மீண்டிப்பிறந்தழியாத-அன்போ *
டினிதின்வளர்ந்துபரசிவநாத. சிவசிவ (க)

சகலகலையுமுணர்ந்து-வேப்பந் *
தார்மன்னன்மந்திரியாகவமர்ந்து *
சுகமிகநீதிபுரிந்து-நாளும் *
சோமசுந்தரர்பாதமன்பாற்பணிந்து-சிவ (உ)

சேர்தென்னவன்பிரமராய-னெனச் *
சிறப்புப்பெயர்பாண்டியன்மிகநேய *
மார்தரவன்புடனீயக்-கொண்டு *
ஆரகயிலாசபதியேசிவாய-சிவ (ஈ)

மாதமுமும்மாரிபெய்ய-நீதி *
வழுவாமல்செங்கோல்செலுத்தியேவையம் *
ஈதுகடைத்தேறியுய்யச்-சொக்கர் *
இணையடிபோற்றிவெண்ணீறணிமெய்ய-சி (௪)

மந்திரியாயிவ்வாறிருந்து-இந்த *
வாழ்வுசதமல்லவென்னநினைந்து *
நந்தமையாள்குருவந்து-மெய்ம்மை *
ஞானமருளாரோவென்றுளநொந்து-சிவ (௫)

பரிகள்கொள்ளும்படிபாண்டி-ராசன் *
பரிவுடனனுப்பவந்தகஒல்லைதாண்டி *
உரியசேனையெல்லாமீண்டி-வர *
ஓகையுடனேசென்றருள்பெறவேண்டிச்-சிவ.௬

திருப்பெருந்துறையினிலந்தக்-கயிலைச் *
சிவனார்குருவுருவாகிக்குருந்த *
மரத்தினடியிலிருந்த-தன்மை *
மகிழ்வுடனேயறிந்தன்புளேதிருந்த-சிவ- (௭)

அங்கேயணைந்தையர்பாத-மலர் *
அன்பொடுபோற்றிச்சிவஞானபோத *
மங்காதருளவினோத-மொடு *
வாழ்த்திப்பணிந்துசிவகுருநாத-சிவ (௮)

மாணிக்கவாசகனென்னக்-கையில் *
மான்மழுதரித்தபரமனார்சொன்ன *
ஊனிப்பாம்பேரதுபின்ன-மின்றி *
உலகத்திலெல்லாரும்போற்றியேதுன்ன-சி(௯)

நரிகளெல்லாம்பரியென்ன-வர *
நாடித்தேவர்களதன்மேலேறித்துன்ன *
அரன்வேதப்பரியின்மேல்மின்ன-நல்ல *
ஆவணிமூலத்தில்வந்தெதிர்மன்ன-சிவ (௰)

குதிரையெல்லாமுன்னம்போல-நரியாய்க் *
குளறிக்கொண்டோடிடப்பாண்டியன்சால *
முதிரும்வெயிலில்வைக்கஞால மேத்து *
முக்கணெம்மையஉனக்கோலமோலம-சி (௰க)

வைகைநதியெங்குப்பரவி-வர *
மகதேவனருளெனப்பாண்டியன்வெருவிச் *
செய்கையினுபகாரங்குருவி-மெண்ணிச் *
செய்யச்சொக்கேசர்பதத்தன்புமருவிச்-சி (௰உ)

ஆற்றங்கரையினைநீரோ-சென்று - *
அடைப்பியுமென்னவளவற்றசீரோ - *
போற்றிப்புரியவாட்பேரோ-மண்கள் - *
போட்டடைக்கவிட்டுமதுரையுளீரோ-சிவ(௰௫)

பிட்டுவிற்கின்றவள்வந்து-போற்றப் - *
பெரியமுடியினில்மண்ணுஞ்சுமந்து - *
மட்டுடைக்கொன்றைக்கீழமர்ந்து-சொக்கர் *
மாறடிபட்டதுகேட்டுளம்நொந்து-சிவ (௰௪)

அந்தஅடியெல்லார்மேலும்-பட - *
அரசனுணர்ந்தெம்பரமனார்போலும் - *
வந்தவனொன்றுசீர்சாலும்-தம்மை - *
வணங்கிடச்சொக்கேசர்தம்மையெக்காலும்-சி

திருப்பெருந் துறைக்கேகுமாறு-மன்ன - *
செல்வுதந்தாலிதுவேபெரும்பேறு - *
ஒருப்படென்றேயவன்கூறு-முமா - *
யுட்கொண்டுநெற்றியிலணிந்துவெண்ணீறு-சி.

காவியுடையந்தரித்துப்-பொல்லாக் *
காமவெகுளிமயக்கமுமரித்துத் - *
தாவிலஞ்செழுத்தையுச்சரித்துச்-சொக்கர் *
சந்நிதிக்குள்ளேபோயன்பாய்த்தோத்திரித்து

பிரியாவிடைபெற்றுக்கொண்டு-திருப் - *
பெருந்துறைக்கேகிக்குருவினைக்கண்டு - *
முரியாவன்போடுமெய்த்தொண்டு-செய்யு *
முனைவர்க்கருள்பரனென்னத்தெருண்டு-சி(௰அ

ஐயன்கயிலைக்குச்செல்ல-எண்ணி - *
அடியாரைநோக்கியிக்குருந்தின்கீழ்ப்புல்லத்-
துப்படிகைசெய்துநல்ல-மலர் - *
தூவித்தொழுதிங்கிருமென்றுசொல்லச்-சி(௰கூ

அவ்வண்ணம்பூசித்திருக்க-நம - *
தரனார்திருவுளந்தன்னையுருக்கக் - *
செவ்வியவாசகஞ்சுருக்க-மின்றிச் - *
சிறப்புடனேயருளைப்பெருக்கச்-சிவ (உ௰)

குருந்தினடியிலமர்ந்த-ஐயர் - - *
கூறியவண்ணந்தடத்திலெழுந்த - *
அருந்தீயிற்கணங்கள்புகுந்த-தநிந் - *
தத்தலத்தெய்தியெனைமுன்புசார்ந்த-சிவ (உக)

ஆத்தனருட்படி நின்று-பின்னர் - *
அணியுத்தரகோசமங்கைக்குச்சென்று - *
நீத்தல்விண்ணப்பம்புகன்று-குரு - *
நிசவடிவங்காட்டத் துன்பமகன்று-சிவ. (உஉ)
சோழநாட்டிலிடைமருது-ஆரூர் - *
துதித்துப்புலம்பலருளியெமது - *
தாழ்வினைநீக்கிறைவனது-மொழி - *
தவருமல்தலமெங்குஞ்சென்றுதொழுது- சிவ
காழியிலேபிடித்தபத்து-சொல்லிக் - *
காதலாற்சிலநாளவிடத்தில்வசித்து - *
வாழுங்கழுக்குன்றைநினைத்துச்-செல்ல - *
மன்றுளதிசையைக்குறித்துத்துதித்து-சி (உ௪)
முதுகுன்றும்வெண்ணெய்நல்லூரும்- தொழு
து,மூவுருவாகியருணையாம்பேரும் - *
பதியுந்தலத்திலெல்லாரும்-போற்றப் - *
படுதிருவெம்பாவைப்பாடிப்பண்பாரும் (உ௫)
அம்மனையும்மங்கேபாடி-மிகும் - *
அன்புடனேதிருக்கழுக்குன்றிற்கூடிச் - *
செம்மைகொள்குருவுருநாடிப்-பதிகம் - *
தெரிசித்தவகைசொல்லிஆனந்தநீடிச்-சி (உ௬)
தேவர்தொழுகின்றதில்லை-வனத்தில் - *
சேர்ந்துநடேசரைப்போற்றியேதொல்லை *
மேவும்வினையெல்லாமில்லை-யாக - *
விரும்புமடியவர்தங்கட்குநல்லை-சிவ (உ௭)

## ஆனந்தகளிப்பு.

புத்தனாவாதினில்வென்று-பேசும் - *
பொறியிலாவூமைப்பெண்பேசமான்கன்று *
வைத்தகைப்பரமனையன்றுள்-அன்பால் - *
வாழ்த்தித்திருச்சாழற்பதிகம்புகன்று-சி(உஅ)

அடைவுடன்பின்படையாட்சி-எழுச்சி - *
அச்சோப்பத்துயாத்திரைப்பத்துமாட்சி - *
உடனோதியன்பதுமூட்சி-யுளத் - *
துற்றவரைப்போற்றிலில்லையோர்தாழ்ச்சி(உகூ

சிவனொருவேதியனைப்போல்-வந்து - *
திருவாசகஞ்சொலலச்சொல்லித்தன்கையால் *
நவமாகஎழுதியதன்மேல்-கோவை - *
நவிலச்செய்தெழுதி மறையக்கண்டருள்சால்.

அம்பலவாணர்வரைந்து-வைத்த - *
அருந்தமிழ்மாலைக்குப்பொருள்நீர்மொழிந்து
எம்பவந்தீருமென்றடைந்து-யாரும் - *
ஏத்தநடேசனேயென்றுள்மறைந்து-சிவ (௩க)

பூதலமாதென்றும்வாழ-நாளும் - *
பொன்மழைபொழிந்திந்தநாடெல்லாம்வாழ *
பூதிசாதனமெல்லாம்வாழ-சிவனைப் - *
போற்றுமடியவரெந்நாளும்வாழ-சிவ (௩உ)

மாணிக்கவாசகரானந்தக்களிப்பு

முற்றிற்று.